padippakam

அன்னை பூபதி நினைவு இதழ்

பெண்கள் தின இதழ்

# ஏலையா

கலை,இலக்கிய,சமூக,பொருளாதார விஞ்ஞான
மாத இதழ்

இதழ்:111, 112, 113







எழுக என் தங்காய்
எழுக என் தங்காய்
இருளினுள்ளிருந்து
எழுக என் தங்காய்!

அனைவரும் ஒருங்கிணைந்து சுதந்திரமானதும்
அமைதியுள்ளதுமான எதிர்காலத்தை நோக்கி

GEMEINSAM FÜR FREIHEITLICHE
UND
FRIEDLICHE ZUKUNFT

பங்குனி, சித்திரை
வைகாசி 1997

படிப்பகம்

padippakam



# அன்னை பூபதி
# தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவம்

எமது புனித விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார். ஒரு பெண்ணாக; ஒரு தாயாக; ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து; சாதாரண பற்று உறவுகளைத் துறந்து; தனது சமூகத்தின் சுபீட்சத்திற்காக; தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார். அவரது தியாகம் ஒப்பற்றது உலக வரலாற்றிலேயே புதுமையானது. இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தை தலைகுனிய வைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

தமிழீழத் தேசியத்தலைவர்
வேலுப்பிள்ளை பிரபாகரன்

படிப்பகம்

ன்னத சக்தி
ளே

உன் விடுதலை உன்னில் உண்டு பெண்ணே
உன்னில் உன்னையே நீ அறிவாய்

கலை, இலக்கிய, சமூக, பொருளாதார, விஞ்ஞான மாத இதழ்.

ஒடகௌசன் தமிழர் ஒன்றியம்

# பெண் விடுதலை என்பது...

பெண் விடுதலை என்பது,அரச அடக்கு முறைகளிலிருந்தும்,சமூக ஒடுக்குமுறைகளிலிருந்தும், பொருளாதாரச் சுரண்டல் முறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதாகும்.ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல.இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**வேலுப்பிள்ளை பிரபாகரன்**

padippakam



தமிழீழத் தாய் எனும் பெயருக்கு உரித்தாகி
அகிம்சைத் தீயில் உரிமைக்குக் குரல் கொடுத்த   உலகை இ
அன்னை பூபதி   தெ

# நமது கருத்து

**திருமதி.க.அதிருபராணி**

பெண் விடுதலை, பெண்ணியம், பெண்நிலை வாதம் போன்ற பெண்கள் உரிமைகள் சம்பந்தப்பட்ட சொற் பிரயோகங்கள் அண்மைக் காலத்திலிருந்து சமுதாயத் திறனாய்வாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

இச்சொற் பிரயோகங்களுக்கு என்ன காரணம், அப்படியாயின் பெண்கள் சமூக நிலையில் அடக்கப்பட்டவளாக, அடிமை நிலைக்குள் தள்ளப்பட்டவளாக இருந்து வருகிறாளா என்ற கேள்வியும் எழுகின்றது. மேலெழுந்த வாரியாக, பொதுவாக, நுனிப்புல் மேயும் நிலையில் பார்க்கும் போது பெண் ஆண்களைப் போலவே இருக்கின்றாள் என்றே எண்ணத் தோன்றும்.

இன்னும் சிலர் இப்படிப் பேசிக் கொள்வதையும் காணக்கூடியதாகவிருக்கின்றது, "பெண்கள் ஆண்களைவிட உரிமை பெற்றவர்களாகவே இருக்கிறார்கள் – அவர்களுக்கு என்ன குறை" என்பதேயாகும். இருப்பினும் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதே உண்மை.

உலக நாடுகளிலுள்ள, அந்தந்த நாட்டுப் பெண்கள், அந்நாடுகளிலுள்ள சமூக, கலாச்சார, அரசியல் சுரண்டல்களினால் அடிமைப்படுத்தப்பட்டவளாகவே இருக்கிறார்கள். ஆண்களை விட பெண்கள் குறைந்தவர்கள் என்ற தவறான பார்வை உலகம் முழுவதும் இருந்து வருகின்றது. இப்பார்வையே பெண்கள் தங்கள் உரிமைக்காக போராட வைத்தது.

பாலியல் வேறுபாட்டினைக் காட்டி பெண்களை சமுதாய மேம்பாட்டு பங்களிப்புகளிலிருந்தும் தடுத்து, ஒதுக்கி வைக்க முயற்சிப்பதன் மூலம் ஒரு சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் இட்



படிப்பகம்

padippakam



டுச் செல்லும் வழியினை அடைத்தல் அல்லது தாமதப்படுத்தல் போன்ற நிலையினைச் சமுதாயம் செய்கின்றது. பெண் என்ற காரணத்திற்காக ஒரு பெண்ணின் சிந்தனையையும் செயல்பாட்டினையும் சமுதாயம் அலட்சியம் செய்ய முயற்சிப்பது மிகவும் தவறானதாகும்.

ஒரு குடும்பச் செயல்பாட்டிலோ அல்லது நிர்வாகச் செயல்பாட்டிலே ஒரு பெண்ணின் ஆலோசனைகள் மிகுந்த கவனத்தில் கொள்ளப்படாதிருத்தல் மட்டும் அல்ல, ஒரு பெண் விவாதத்திலோ அல்லது கருத்து முரண்பாட்டுத் தெளிவினை வாதிக்கும் போதே அதை சீரணிக்க முடியாத ஆண்கள் அல்லது அந்தக் குடும்பம் அப்பெண்ணுக்கு "வாய்க்காரி" என்ற பட்டத்தினையும் கொடுக்கின்றது.

பெண்விடுதலை ஆண்களுக்கு எதிரானது என்ற தவறான கண்ணோட்டமே பெண்களை இரண்டாந்தர நிலையில் பார்வையை ஆண்களுக்குக் கொடுத்து வருகின்றது. குடும் நிலையில் பார்க்கும் போது ஒரு மனைவி வீட்டு வேலைகளை தனது கணவனுக்கு நிகராகவே செய்து வருகின்றாள். வேலைக்குச் செல்லும் கணவன் செய்யும் வேலைகளைவிட சில நேரங்களில் மனைவி தனது வீடுகளில் அதிகளவு செய்கிறாள். ஆனால் பொதுவான பார்வைக்கு மனைவி ஒன்றுமே செய்வதில்லை என்றே கணவனுக்கு எண்ணத் தோன்றும். ஆனால் அது தவறானது.

தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரையில், இன்று அவர்கள் வாழும் காலகட்டம் முகவும் முக்கியமானது. தமிழர் சமுதாயத்தில் காலம் காலமாக நிலவி வந்த பெண் அடக்குமுறையைத் தகர்த்தெறிந்த செயல்பாடாக தமிழீழ விடுதலைப் போராட்டம் அமைந்து வருகின்றது. தமிழீழத் தனி நாட்டினை உருவாக்கும் பணியில் பெண் புலிகள் தொடக்கம் சகல பணியிலும் பெண்களின் பங்கு விரவி நிற்பதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்ட சக்தி அதிகரித்தது மட்டுமல்ல பெண் போராளிகளினதும் பெண்களின் சகல மட்டச் செயல்திறனையும் பார்த்து உலக நாடுகள் வியந்து நிற்கின்றன.



படிப்பகம்

padippakam





தமிழீழத் தாய் எனும் பெயருக்கு உரித்தாகி
அகிம்சைத் தீயில் உரிமைக்குக் குரல் கொடுத்த
அன்னை பூபதி

உலகை இய
தொ

பெண்களின் உரிமைகளை மதிக்காத நாடுகள் எதுவுமே வளர்ச்சியடைந்ததாக இல்லை. அந்த நாடுகள் எவ்வளவுதான் பொருளாதார வசதியினைக் கொண்டிருப்பினும் அந்த நாடுகளால் வளர்ச்சியடைய முடியாது. பெண்களது சிந்தனையையும் செயல்பாட்டினையும் ஆண்களுக்கு நிகராக ஒரு நாடு உள்வாங்கிக் கொள்ளுமானால் அந்த நாடு துரித வளர்ச்சியடையும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்கள் கலாச்சார முரண்பாட்டுக்குள் சிக்கிச் சீரழியாமல் மிகுந்த கவனத்துடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். உடல், மனம் சம்பந்தப்பட்ட ஒழுக்கவியல் ரீதியான உறுதியான கொள்கை ஒவ்வொரு பெண்ணிடமும் காணப்பட வேண்டும்.

மேலைத்தேய கலாச்சார வலைக்குள் லயிக்காது, நல்லவற்றையும் நமது கலாச்சார பண்பாட்டு தன்மைக்கு மட்டும் ஏற்றவையும் உள்வாங்கிக் கொள்ளல் தவறாகாது. மேலைத்தேயப் பெண்களிடம் காணப்படும் சுறுசுறுப்பு, நிர்வாகத்திறமை, விஞ்ஞான, தொழில்நுட்ப, இன்னும் சகல மட்டங்களிலும் காணப்படும் அவர்களது ஆற்றல் போன்ற எமது சமுதாயத்தை அரசியல், பொருளாதார முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய அவர்களின் செயல்திறனை, அவர்களின் அணுகுமுறையை உள்வாங்கிக் கொள்ளலாம். மேலைத்தேய கலாச்சாரம் வேறு, அங்கு காணப்படும் திறமை வேறு. இரண்டும் வெவ்வேறானவை. இதனை எமதினப் பெண்கள் நன்கு தெளிவறத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றிபெற புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்ப் பெண்கள் பங்காற்ற வேண்டிய காலம் இது. ஒவ்வொரு வீடுகளிலும் தமிழீழத் தனிநாடு உருவாக வேண்டிய தேவையையும், அதற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்யும் மாவீரர்களினதும், பொதுமக்களினதும் தியாகங்கள் பற்றி குடும்ப அங்கத்தவர்களுடன் உரையாட வேண்டும்; கருத்துக்களைப் பரிமாற வேண்டும். வீடே ஒரு நாட்டின் ஆரம்பம்.



படிப்பகம்

padippakam



உன் விடுதலை உன்னில் உண்டு பெண்ணே
உன்னில் உன்னையே நீ அறிவாய்

# ஊழிக்கூத்து எப்போது?

கவிஞர் புதுவை இரத்தினதுரை

பெண்ணே கண்களைத் திற
விழிநீரைத் துடைத்து எறி
அதில் போட்டு விளக்கேற்று
உலகம் உனக்குத் திறந்தவெளிச் சிறைச்சாலை
விலங்கிடப்படாத கைதி நீ
உனது விடுதலைக்கு தேதி குறிக்கவில்லை
"என்னை விடுதலை செய்"
என்றாவது "மகஜர்" கொடுத்தாயா?
அதுகூட இல்லை
வளையலும், மெட்டியும், கனகாம்பரமும்
உனக்கு வடிவுதான்
அதனால்தானே,
சேலைக்கடைப் பொம்மை போலக்
காலம் கழிக்கின்றாய்
எனக்குத் தாய்....இன்னொருவனுக்குத் தாரம்...
அடுத்தவனுக்கு அக்கா......மற்றவனுக்கு மகள்
எத்தனை அவதாரங்களாகின்றாய்
என்றாலும் அடங்கிய வாழ்வுதான்
எத்தனை யுகங்களாக....
புல்லாகி, பூடாகி, புழுவாகி, மரமாகி
செல்லாத வாழ்வு உனக்கு?
உன் ஊழிக்கூத்து எப்போது?

நன்றி
நினைவழியா நாட்கள்" கவிதைத் தொகுப்பிலிருந்து



படிப்பகம்

padippakam



அன்னை பூபதி நினைவு இதழ்
தமிழீழத் தாய் எனும் பெயருக்கு உரித்தாகி
அகிம்சைத் தீயில் உரிமைக்குக் குரல் கொடுத்த
அன்னை பூபதி

உலகை இ
தெ

# பெண்களும் கல்வியியலும்

திருமதி:லோகாஞ்சனா அருந்தவநாதன்

கல்வியியல் என்பது கற்றற் பயிற்சி எனப் பொருள் கொள்ளப்படுகிறது. குடும்பம், தொழிற்சாலைகள் அரசாங்கம் - நாகரிகம் சமயாசாரங்கள் போன்ற சமூகத்தின் பலதரப்பட்ட விடயங்கள் சமூகத் தொடர்புள்ளதாக இருப்பதால் மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை கல்வியின் பயன்பாடு மிக முக்கியமாக அமைகிறது.

சமூகத்தின் முன்னேற்றுத்துக்குக் கல்வியைக் கற்க வேண்டிய கட்டாயம் எல்லோருக்குமுண்டு. இதில் பெண்களும் கல்வியிலும் என்ற தலைப்பிலே பெண்கள் எந்தளவுக்குக் கல்வியைப் பயன்படுத்துகிறார்கள்? அதனால் எப்படிப் பயனடைந்துள்ளார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்தால் நன்மைகளே அநேகம்.

இன்று கல்வியாற் பெண்கள் பட்டங்கள் பெறவும், சட்டங்கள் ஆராயவும், நாட்டை ஆளவும், விண்வெளிகளில் விமானங்களைச் செலுத்தவும் - தொலைத்தொடர்பு நிலையங்களில் பணிபுரியவும் - இப்படி மக்கள் தொடர்பு பெற்றுச் சாதனை புரியுமளவுக்கு முன்னேறியுள்ளனர்.

இன்றைய பெண்கள் கல்வியியலிலே வியக்கத்தக்க முன்னேற்றமடைந்ததாற் சமூகத்திலே புரையோடிப் போன மூடப்பழக்கவழக்கங்கள் சாதி வேற்றுமை - பொறாமை ஒழிந்து ஓரளவேனும் சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திச் செயற்கரிய சாதனைகளை நிலைநாட்டி வருகின்றனர்.

இந்தளவுக்குப் பெண்கள் முன்னேறியது மட்டுமல்லாது தமக்குரிய தாய்மைப் பணியிலும் சிறப்பாகப் பணிபுரிவதை மறந்துவிடாமல் மக்களைப் பெற்று நல்ல பண்புள்ள, பகுத்தறிவுள்ள மனிதநேயப்



படிப்பகம்

padippakam



ன்னத சக்தி
ளே

உன் விடுதலை உன்னில் உண்டு பெண்ணே
உன்னில் உன்னையே நீ அறிவாய்

பண்புள்ள ,சிறந்த நாட்டுப் பிரசையாக உருவாக்குவதைத் தன் கல்வியறிவினால் கடமையாகக் கொண்டு,தான் பெற்ற மக்களின் உளப்பாங்கறிந்து நன்னெறிப்படுத்துகின்றாள். இது மட்டுமல்லாது அறிவை வளர்க்க தமது சுய தேவைகளுக்காகக் கல்வியைக் கற்று வருகின்றனர்.

கல்வியைக் கற்காது முடங்கி இருக்கும் பெண்கள் கல்வியைக் கண்ணாக எண்ணி கற்க முன் வர வேண்டும்.தாம் பெற்ற மக்களின் மனப்போக்கு,பிடிவாதம்,வீம்பு போன்ற சராசரி மன உணர்ச்சிகளை புரிந்து கொண்டு திண்டாடாமல் அவர்களை நாட்டின் நாளைய நல்ல சந்ததிகளாக உருவாக்கும் கடமையைப் பெண்கள் உணர வேண்டும்.

"அள்ள அள்ள நீர் பெருகுவது போலக் கற்க கற்க அறிவு பெருகும்" எனவே சமூகத்தின் நிலைத் தன்மைக்கும்,அதன் மூலம் தொடர்ந்த,தொடரும் முன்னேற்றத்துக்கும் ஆதாரமாகப் பெண்கள் கல்வியிலிலே காட்டும் தளராத முயற்சி.செயலிற் செம்மை.உறுதி.உத்வேகம்.உண்மை போன்ற சிறந்த பண்புகளைப் பேணி.மேன்மேலும் கற்றல் நிகழ வேண்டிய உண்மையை உணர்வதுடன்.இன்று பெண்கள் கல்வியியலிலே மிகவும் வளர்ந்து விட்டார்கள் என்ற உண்மையை நிலைநாட்டுவதற்கு முடங்கியிருக்கும் பெண்கள் முன் வர வேண்டும்.

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

ஓபகௌசன் விளையாட்டுக் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி Oberhausen (Sterkrade) Dachs Str-Alsfeld மைதானத்தில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை 16.8.97 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடாத்தவிருக்கின்றது.



படிப்பகம்

padippakam



# படைப்பாளி சக சமுதாயம் இலக்கியம்

நன்றி:பேராசிரியர் க. ப. அறவாணன்

தமிழிலக்கியச் சமூகவியல் என்பது சமூகவியற் பார்வையையும், பகுப்பையும், கருத்துப் படிவங்களையும். *(CONCEPTS)* கோட்பாடுகளையும் *(THEORIES)* தமிழிலக்கியத்தில் பொருத்தி ஆய்வதாகும். இலக்கியம், சமூகம் என்ற இரண்டிற்கும் இடையே மெய்யாக இருக்கிற உறவை ஆழ்ந்து நோக்குவதே சமூகஇலக்கியக் கல்வியின் சாரம்,

**சமூகவியல் ஓர் அறிமுகம்**

*SOCIOLOGY* என்ற சொல் ஆகஸ்ட்கோம்த் என்றஅறிஞரால் 1839 ஆம் ஆண்டு உருவாக்கப்பெற்றது. சமூகவியல் ஒரு தனிப்பாடமாக 1876 இல் ஐக்கியஅமெரிக்க நாட்டில்தான் அறிமுகமாயிற்று. 1889 இல் பிரான்சு நாட்டிலும். 1907 இல் கிரேட் பிரிட்டன் நாட்டிலும் உருவாக்கப்பட்டது. இந்திய நாட்டில் 1919 ஆம் ஆண்டிலே அறிமுகமாகியிருந்தாலும் 1930 ஆம் ஆண்டுதான் பம்பாய்ப் பல்கலைக் கழகம் தனிப்பாடமாக நிறுவியது.

கால நெருக்கடியின் விளைவாக உலகத் தேவையின் நிறைவாக உருப்பெற்றதுதான் சமூகவியல். தொழிற் புரட்சிக்குப் பின் உலக அரசியல் பொருளாதாரச் சமூக அமைப்பில் பெரும் மாறுதல்கள் பல நிகழ்ந்தன. இந்த மாற்றங்களைத் தொகுத்து ஆய்ந்து தொழிற்புரட்சியின் போக்கை நெறிப்படுத்தவே பிறந்தது சமூகவியல்.



படிப்பகம்

padippakam



சமூகவியலின் பொருள் பற்றியும், அதன் பாட வரையறை (SCOPE) பற்றியும் பல்வேறான கருத்துகளும், விவாதங்களும் எழுந்துள்ளன. சமூகத்தைப் பற்றிய அறிவியல், சமூகவியல் என்பது சுருக்கமான விளக்கம். ஜின்ஸ்பர்க் என்ற அறிஞர், `சமூகவியல் என்பது மனிதத் தொடர்பு, மனித உறவுகள் ஆகிய இரண்டின் போக்குகளையும், விதிகளையும், விளைவுகளையும் பற்றிய ஆய்வு', என்று வரையறுத்துள்ளார். மனித உறவு, மனிதத்தொடர்பு (INTERACTION) இவை இரண்டையும் மையமாகக் கொண்டு அமைகின்ற நிறுவன அமைவையும் (INSTITUTION), அமைப்பையும் (STRUCTURE), பற்றிய ஆய்வும் கூடச் சமூகவியலின் எல்லைக்குள் அடங்கும்.

சமூகவியல் பார்வை (SOCIOLOGICAL VIEW) சமூகவியல் பகுப்பு (SOCIOLOGICAL ANALYSIS) இவையிரண்டையும் சரியாகப் புரிந்துகொண்டுவிட்டால், இந்தப் பார்வையையும் பகுப்பையும் இலக்கியத்தில் எளிதாகப் பொருத்த ஏதுவாகவிருக்கும். சமூகவியல் பார்வை என்பது கோட்பாடு. சமூகவியல் பகுப்பு என்பது செயற்பாடு. ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டு ஆய்வோம். சில ஆண்டுகளுக்கு முன் இராசதான் மாநிலத்தில் டியோரா என்ற நாட்டுப்புறத்தில், ருப் கன்வர் என்ற பெண் உடன்கட்டை ஏறியதாக நாம் அறிந்தோம். இதை ஒரு செய்தியாளர் (JOURNALIST) அணுகும் பொழுது சதி நிகழ்ச்சி ஏன் நடந்தது, எப்படி நடந்தது எங்கு நடந்தது என்ற வினாக்களுக்கு விடை காண்பார். ஒரு பொருளாதார நிபுணர் அணுகுகையில், சதி நிகழ்ச்சிக்குப் பொருளாதாரப் பின்னடைவு காரணமா? ருப் கன்வரின், அவள் குடும்பத்தின் பொருளாதார நிலை யாது? `சதி' நிகழ்ச்சிக்குப் பின்னணியில் ஏதேனும் பணபலம், நிறுவன பலம் உண்டா? என்று ஆய்வு செய்வார். அரசியல் நிபுணரின் பங்கு என்ன? உள்ளூரில் இந்நிகழ்ச்சியால் அரசியல் பலம் பெருகியோ குறைந்தோ இருக்கிறதா? என்று ஆய்வார். ஒரு சமூகவியல் ஆராய்ச்சியாளர் ருப்


படிப்பகம்

padippakam



கன்வரின் குடும்பப் பின்னணி, அவளுடைய கணவரின் குடும்பப் பின்னணி, ருப் கன்வர் திருமணச் சூழல், ருப் கன்வரின் மணவாழ்க்கை நண்பர் மற்றும் அயலாருடன் அவளுடைய உறவும் தொடர்பும், முதலியவை பற்றியகருத்துண்மைகளைச் சேகரிப்பார், பின்னர், அவ்வுண்மைகளுக்குச் சமூகவியல் கருத்துப் படிவங்களையும்(CONCEPTS) கருநிலைக் கோட்பாடுகளையும் கொண்டு விளக்கம் தருவார். எடுத்துக்காட்டாக, கணவன் இறந்தவுடன் மனைவி இறக்கவேண்டும் என்பது கிராமத்தின் விதி. சமூகக் கட்டுப்பாட்டுப்(SOCIAL CONTROL) பிரிவில், இரண்டு குறிப்பிடத் தக்க கருத்துப்படிவங்கள் உண்டு, அவை `FOLKWAY' (நாட்டுப்புற வழக்கம்) 'MORE' (நாட்டுப்புற விதி) என்பன,

## நாட்டுப்புற வழக்கம் என்பது

1. வாய்ச்சொல்லாக வழிவழி வருவது,
2. மாறுதல்களுக் குட்பட்டது,
3. குறைவான தண்டனையே நாட்டுப்புற வழக்கத்தை மீறுவோருக்கு வழங்கப்படுகிறது.
4. ஒருவருடைய சமூக மதிப்பிற்கும் (SOCIAL STATUS), தொழில் மதிப்பிற்கும் வளைந்து தரக்கூடியது.

## நாட்டுப்புற விதி என்பது:

1. கொடுமையானதும், கடுமையானதும் ஆகும்,
2. தண்டனைகள் அதிகம்,
3. நாட்டுப் புறத்தைச் சேர்ந்த மக்களின் பழக்க வழக்கங்களையும், உறவுப் போக்குகளையும் வரையறை செய்வது,
4. நாட்டுப்புற விதி மீறுதல் குறிப்பிட்ட சமுதாய மக்களின் ஒற்றுமைக்கு உலை வைப்பதாகவும், பிற உறுப்பினர்களுக்கு இடைஞ்சலூட்டுவதாகவும் கொள்ளப்படுகிறது. -

ருப்கன்வர் நிகழ்ச்சிக்கு மீண்டும் வருவோம், சதி என்பது டியோரா நாட்டுப்புற விதி (MORE), இப்பொழுது நாட்டுப்புற



படிப்பகம்

padippakam



விதியின் பொருளை அப்படியே சதி நிகழ்ச்சியின் மீது ஏற்றுவோம்.

1. சதி நிகழ்ச்சியை மேற்கொள்ளாவிடில், ருப்கன்வருக்குக் கொடிய தண்டனைகள் தரப்பட்டிருக்கக் கூடும். சமூகத்திலிருந்து வெளியேற்றுதல் *(EX-COMMUNICATION)* என்பது ருப்கன்வர் போன்ற பெண்ணுக்கு மிகக் கொடிய தண்டனை. அதற்கஞ்சியே ருப்கன்வர் உடன்கட்டையேறினாள் என்று கொள்ள இடமுண்டு.

2. ருப்கன்வர் படித்த பெண்ணாயிருந்தும் கூட உடன்கட்டையேறியுள்ளாள் அல்லது ஏற்றப்பட்டிருக்கிறாள். காரணம் என்ன? நாட்டுப்புற விதிகள் சமூக மதிப்பிற்கோ *(SOCIAL STATUS)* தொழில் மதிப்பிற்கோ*(OCCUPATIONAL STATUS)*. கல்வி மதிப்பிற்கோ *(EDUCATIONAL STATUS)* வளைந்து கொடுப்பன அல்ல.

3. நாட்டுப்புற மரபையும், ஒற்றுமையையும் கட்டிக் காப்பதற்கே ருப்கன்வர் உடன்கட்டையேறினாள் என்று கொள்ள இடமுண்டு.

4. ருப் கன்வர் உடன்கட்டை ஏற விரும்பவில்லையென்றாலும் கூட நாட்டுப்புற விதியைக் கட்டிக் காக்கிற கூட்டம் அவளைக் கட்டாயப்படுத்தி உடன் கட்டையேற வைத்துவிடும்.

இதுபோன்று சமூகவியல் விளக்கம் தந்த பிறகு குறிப்பிட்ட கிராமத்திற்குச் சென்று சமூகவியல் ஆய்வு முறைகள் ஆன கள ஆய்வு முறை *(SURVEY METHOD)* நேர்முக முறை *(INTERVIEW METHOD)* வினாநிரல் முறை *(QUESTION-NAIRE METHOD)* வழியாக டியோரா நாட்டுப்புற வழக்கங்கள் *(FOLKWAYS)*. விதிகள் அவற்றின் செயற்பாடுகள் ஆகியன பற்றிய உண்மைகளைச் சேர்த்து, உடன்கட்டையின் நிகழ்ச்சிக்கான உண்மைக் காரணத்தை அறியலாம்.

நாட்டுப்பற விதிதான் *(MORE)* காரணம் என்று முடிவுக்கு வந்தால், நாட்டுப்புறத்தின் ஒற்றுமையை மக்களுக்கு


படிப்பகம்

padippakam



வேறுவகையில் விளக்குதல் வேண்டும்; சமூகக் கல்வி தருதல் வேண்டும்.

உண்மையை அறிவதோடு சமூகவியலாரின் வேலை முடிந்ததென்பர் சிலர். இல்லையில்லை தொடர்ந்து தீர்வுகளைச் சொல்லி அவற்றைச் செயல்படுத்தவும் வேண்டுமென்பர் வேறுசிலர்.

சதி நிகழ்ச்சியைச் சமூகக் கட்டுப்பாடு (SOCIAL CONTROL) என்ற ஒரே ஒரு கோணத்திலிருந்து பார்த்தோம். இதை மேலும் அமைப்பு நோக்கில் (சதியை ஓர் அமைப்பாக எடுத்து) (STRUCTURE) ஆய்வு செய்யலாம். சதியை ஒரு நிறுவனமாக (INSTITUTION) எடுத்தும் ஆய்வு செய்யலாம். இது போன்ற வேறு சில பகுப்பு முறைகளும் உண்டு. சமூகவியலில் முதன்மையான சில் பகுப்பு முறைகள்.

1. STRUCTURALISM (அமைப்பியல்)
2. FUNCTIONALISM (செயற்பாட்டியல்)
3. INTERACTIONISM (தொடர்பியல்)
4. CONFLICT APPROACH (முரண்பாட்டியல்)

சமூகவியல் பார்வையையும், பகுப்பையும் புரிந்து கொண்டபின் சமூகவியல் நோக்கில் இலக்கியத்தை நோக்குதல் வேண்டும்.

## இலக்கியம் - சமூகவியல் கருதும் பொருள்

இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். இலக்கியம் காட்டும் பொருள் காலம் காலமாக மாறுகிறது. இனியும் அப்படியே மாறும். இலக்கியம் என்பது ஒரு படைப்பு. ஒரு தனிமனித முயற்சி. காலத்தை வெல்லுகின்ற படைப்பை ஒரு மனிதன் இயற்றினால் அப்படைப்பு இலக்கியமாகிறது. 'பத்தாயிரம் கழஞ்சுப் பொன்பரிசாக்க் கொடுத்தான், ஐம்பது கிராமங்களை அள்ளிக் கொடுத்தான் யானையைக் கொடுத்தான், அரசவைப் புலவராக்கினான் மன்னன்' என்றெல்லாம் வாசிக்கிறபொழுது, மன்னன் தனிமனிதத் திறனுக்குப் பரிசளித்தான் என்பதால், 'இலக்கியம்



படிப்பகம்

padippakam



தனிமனிதச் சாதனையே'. என்ற எண்ணம் நமக்குள் ஊறிப்போய்விட்டது.

இலக்கியம் என்பது ஒரு சமூகச் சக்தி (*LITERATURE IS A SOCIAL FORCE*) இலக்கியம் என்பது தனி மனிதச் சாதனையாக இருக்கலாம். இலக்கியத்தின் பின்னணியில் சமுதாயம் இருக்கிறது. இலக்கியம் மட்டுமன்று, மனிதனின் எல்லாச் சாதனைகளுமே, ஏன் மனிதனே சமுதாயத்தால் தான்உருவாக்கப்படுகிறான். ஒவ்வொரு மனிதனும் இந்தச் சமுதாயத்தின் 'சாதனை'. இலக்கியம் தனிமனிதச் சாதனை என்று நாம் கருதியதால்தான் இலக்கியத்தின் ஒங்கிய உறுதிமிகு வச்சிரம் பாய்ந்த சக்தியை நாம் புரிந்துகொள்ளவில்லை.

மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்' புதினம் உருசியப் புரட்சிக்கு எப்படி வலுவூட்டியது என்பது வரலாற்று அறிஞர்களுக்குத் தெரியும். இலக்கியம் என்ற சக்தி சமுதாயத்தில் இருந்துதான் வெளிப்படுகிறது. சமுதாயம் இல்லாவிட்டால் இலக்கியம் இல்லை. படைப்பாளியு மில்லை. ஆகவே ஒவ்வொரு படைப்பாளியின் சமூகப் பின்னணியைக் கூர்ந்து நோக்க வேண்டும்.

இலக்கியம் நல்லவற்றை மட்டும் பேசுவதா? அல்லவற்றையும் பேசுவதா? இலக்கியம் நல்லதாக இருக்க வேண்டுமென விரும்புகிறோம். சமுதாயத்தை, மானுட குலத்தை முழுமையாக நோக்கி உந்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள், தீமைகள் இருப்பது போலவே சமுதாயம் பெற்றெடுத்த இலக்கியங்களிலும் இருக்கும். நல்ல இலக்கியத்தை இரசனை, வடிவம், மக்கள் ஆதரவு ஆகியன மட்டும், தீர்மானிப்பது இல்லை. அது சமுதாயத்தை மேலெடுத்துச் செல்லவேண்டும். நல்லவற்றை அடையாளம் காட்டவேண்டும். தீயவற்றை இனங்கண்டு அதன் வேர்களைக் கண்டு தூரிலே அறுத்தெறியவும் சமூகவியல் கைகொடுக்க வேண்டும்.

இலக்கியம் ஒரு பண்பாட்டின் பிரிக்க வியலா உறுப்பு. பண்பாடு என்ற உறுப்பில் இருக்கிற துணை உறுப்புகளோடு வலுவாகப் பொருந்தி இயங்குகிற பிரிக்கவியலா உறுப்பே



படிப்பகம்

padippakam



உலகை இய
தொ

இலக்கியம். இலக்கியம் இல்லாத பண்பாடு, கண் இல்லாத மனிதன் போல. இலக்கியம் பண்பாட்டை உருவாக்கவும் செய்யும்; உருக்குலைக்கவும் செய்யும். சமுதாய வளர்ச்சி தான் இலக்கியத்தின் போக்கை நிர்ணயிக்கிறது.

இலக்கியம் ⟷ சமூகம்

இலக்கியம் வளர்ந்தால் சமூகம் வளரும். இலக்கியம் சாய்ந்தால் சமூகம் சாயும். சமூகம் வளர்ந்தால் இலக்கியம் வளரும். சமூகம் சாய்ந்தால் இலக்கியம் சாயும்.

இலக்கியம் என்ற சமூகச் சக்தியை, அன்றைய சமுதாயத்தின் வேறு பல சக்திகளும் தாக்கி, நிர்ணயம் செய்தன. இலக்கியம் மனித உறவுகளை உணர்வுபூர்வமாகத் தொட்டு அறிவுபூர்வமாக விளக்கி ஆக்கபூர்வமாகச் செயல்பட வைக்கிற காரணத்தால், சமூக மாற்றத்திற்கான கருவியாகவும் திகழ்கிறது. *(AGENT OF SOCIAL CHANGE).* குறிப்பிட்ட சமுதாயத்தின் மொழி, இலக்கியத்தின் வார்த்தைகள், வடிவம் ஆகியன அச்சமூதாயத்தின் வளர்ச்சியையும் இலக்கியச் செல்வத்தின் மிகுதியையும் பொறுத்தே அமைகின்றன எனலாம். இலக்கியம் வளைந்து கொடுக்கக் கூடிய கருவி. பல சமயம், சமூகம் காட்டிய வழியில் இலக்கியம் போகிறது. சில சமயம், இலக்கியம் காட்டிய வழியில் சமூகம் போகிறது. சமுதாயம், தனிமனிதன் இவை இரண்டும் இணைந்து உருவாக்கும் படைப்பே இலக்கியம். ஆனால் சில வேளைகளில் இவைகளின் பங்கு சரிசமமாக அமைவதில்லை. சில இலக்கியங்களில் 75% சமூகம், 25% தனிமனிதத்தனம். சில இலக்கியங்களில் 25% சமூகம் 75% தனிமனிதத்தனம். இன்னும் தெளிவாகச் சமூகத்தின் பங்கைச் சொல்ல வேண்டுமென்றால் தனிமனிதத்தனத்தை ஒட்டி இலக்கியம் படைக்க வேண்டும் என்று உந்தியதும் சமுதாயம் தான். சமூக நோக்கிலே இலக்கியம் படைக்க வேண்டும் என்றதும் சமுதாயம் தான், சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபாடு இருக்கிறது. எல்லாச் சமுதாயத்திலுமே நன்மையும் உண்டு தீமையும் உண்டு.


படிப்பகம்

padippakam



முழுதாக நல்ல சமுதாயம் இல்லை. முழுதாகத் தீய சமுதாயம் இல்லை. நன்மை, தீமை இவற்றின் அளவு கூடியோ குறைந்தோ இருக்கலாம். சமுதாயச் சக்திகள் படைப்பாளியைத் தாக்கும் நல்லதையோ தீயதையோ அவன் விரும்பிய அளவு எடுத்து இலக்கியம் ஆக்குகிறான். இந்த நோக்கில், தீய இலக்கியம் பயனற்ற இலக்கியம் படைத்த படைப்பாளி தனிமனித உணர்வை அதிகம் பயன்படுத்தி, சமூக எண்ணங்களை நசுக்கிய கொடும் குற்றவாளி ஆகிறான். இதே பகுப்பை, இப்பொழுது தமிழ்ப் படைப்பாளிகளுக்கோ அல்லது தமிழ் இலக்கியங்களுக்கோ உட்படுத்துவோம். தமிழ் இலக்கியத்தில் விஞ்சுவது சமூக உணர்வா? தனிமனித உணர்வா? தனிமனித உணர்வு ஏன் ஓங்கியது? சமூக உணர்வு ஏன் மங்கியது? சமூக உணர்வு குறைந்ததன் அரசியல், பொருளாதார, சமூகப் பின்னணியென்ன? இது போன்ற வினாக்களை எழுப்பவும் விடைகாணவும் தமிழ் இலக்கியச் சமூகவியல் உதவும்.

ஓர் இலக்கியத்தை மேலோட்டமாகத் தெரிந்து கொள்வது வேறு ஆழமாகப் புரிந்து கொள்வது வேறு. தமிழ் இலக்கியத்தைப் பலரும் தெரிந்து கொள்கிறார்கள், புரிந்து கொள்ள முயல்வதில்லை. புரிந்து கொள்ள வாய்ப்புப் பெறவில்லை, தமிழ் இலக்கியத்தைப் புரிந்து கொள்ளத் தமிழ் இலக்கிய மரபை மட்டும் பயின்றால் போதாது. தமிழ் இலக்கியத்தைப் புரிந்து கொள்ளத் தமிழ்ச் சமூகத்தையும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்ச் சமூகத்தைப் புரிந்து கொள்ளத் தொடக்கம் முதல் இன்றுவரை தமிழரிடையே நிலவிய, நிலவுகின்ற உறவுமுறைகளை (KIN-SHIP) திருமண முறைகளை (MARRIAGE) ஏற்றத்தாழ்வுகளை, சமுதாயப் பிரிவுகளை, சமுதாய நிர்வாகத்தை, அரசியல் அமைப்புகளை, பொருளாதார நிலைகளை, பொருளாதார அமைப்புகளை, விற்பனை மற்றும் வாணிப முறைகளை, தமிழர் சட்டங்கள் முதலிய பல கூறுகளைப் புரிந்து கொண்டால்தான் தமிழ் இலக்கியம் பற்றிய முழுமையான



படிப்பகம்

padippakam



புரிதல் விளையும். இப்படித் தமிழ் இலக்கியத்தை முழுமையாகப் புரிந்துகொண்டால் இலக்கியத்தைத் தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்திற்கான மிகச் சிறந்த கருவியாகப் பயன்படுத்தலாம். இலக்கியம் என்ற சாதனத்தின் சக்தியை நாம் சமூகவியல் மூலமாகப் புரிந்துகொண்டால், மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் எச்சரிக்கையுடனும் அச்சாதனத்தைப் பயன்படுத்தித் தமிழ்ச் சமுதாயத்தைத் தலைநிமிரச் செய்யலாம்.

## தமிழ் இலக்கியச் சமூகவியல் *(SOCIOLOGY OF TAMIIL LITERATURE)*

தமிழ் இலக்கியத்தைச் சமூகவியலில் எப்படிப் பயன்படுத்தலாம் என்பது குறித்த சிந்தனைகள் வருமாறு: எந்த ஒரு செயலுக்குமே அடிப்படையாக ஒரு குறிக்கோள் அமைய வேண்டும். தமிழ் இலக்கியத்துடன் சமூகவியலையும் சேர்த்துப் பயிலுவதன் நோக்கம்:

1. தமிழ்ச் சமுதாயத்தைப் புரிந்து கொள்ளுதல்.
2. தமிழ்ச் சமுதாயத்தின் தோற்றம், பல்வேறு கட்டங்களில் அது பெற்ற வீழ்ச்சி, வளர்ச்சி நிலைகளை ஆய்வு செய்தல், அதன் காரணங்களை அறிதல்.
3. இலக்கியம் என்ற தொடர்புச் சாதனத்தின் சக்தியைப் புரிந்து கொண்டு, இன்றைய தமிழ்ச்சமுதாயத்தை முழுமை நோக்கி வழி நடத்த, இலக்கியம் படைத்தல், இலக்கியம் பகுத்தல், இலக்கியம் தொகுத்தல்.
4. தமிழ் இலக்கியத்தைச் சமூகவியல் நோக்கில் ஆய்வு செய்து, இலக்கியச் சமூகவியலுக்குப் *(SOCIOLOGY OF LITERATURE)* புதிய கருநிலைக் கோட்பாடுகளையும் *(THEORIES)* கருத்துப்படிவங்களையும் *(CONCEPTS)* வழங்கிச் சமூகவியலைச் செழிக்கச் செய்தல்.

1. சமூகவியலில் காணப்படுகின்ற கருத்துப்படிவங்களையும் *(CONCEPTS)* கருநிலைக் கோட்பாடுகளையும் தமிழ் இலக்கியத்தைப் பின்புலமாகக் கொண்டு புரிந்துகொள்ளுதல்.



படிப்பகம்

padippakam



தமிழ் இலக்கியத்தில் அன்று முதல் இன்று வரை காணப்படும் சமூக உறவுகளைப் புரிந்துகொள்ளுதலை ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். ஒவ்வோர் உறவின் பின்புலத்திலும் ஆயிரமாயிரம் எண்ணங்கள் புதைந்து இருக்கின்றன. மாமன் என்ற உறவு தமிழர்களின் வாழ்க்கை நெறியில் மிகுந்த சிறப்புடையது. ஏன் இந்த உறவு சிறப்புப் பெற்றது? பொருளாதாரக் காரணமா? அரசியற் காரணமுண்டா? சமூக நோக்கம் ஏதேனும் உண்டா? இந்த மாமன் உறவு எப்படி உருவானது? இந்த உறவு எல்லா வாழ்க்கை நிலைகளிலும் பொதுவானதா? மாமன் என்ற மனிதருடைய உரிமைகள் அன்று முதல் இன்று வரை எப்படி மாறி மாறி வந்துள்ளன? பண்டைய மாமனுடைய உரிமைகளையும் இன்றைய மாமனுடைய உரிமைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தல் -இவ்வாறாக ஆய்வு செய்யலாம். இலக்கியம் அந்தந்தக் காலத்தைக் காட்டுகின்ற ஒரு சக்தியாக இருப்பதால், உறவுமுறைகளின் சமூக முக்கியத்துவத்தை ஆய்வு செய்யலாம்.

பல்வேறு உறவுகள் கொண்ட சமூக அமைப்பில் மாமன் என்ற உறவுமுறை ஒரு சிறு (UNIT) கூறு. இதன் (இந்த உறவின்) வளர்ச்சி நிலைகளைக் கணிப்பதால் என்ன பயன்? பயனுண்டு.

தாய்வழிக் குடும்ப முறையில் (MATRIARCHAL SYSTEM) தான் மாமனுக்கு மதிப்புண்டு. இடைக்கால இலக்கியத்தில் மாமனுடைய மதிப்பும், சமூக மரியாதையும், கடமையும் உரிமையும் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன அல்லது மங்கியுள்ளன என்று ஆய்வாளர் ஒருவர் கண்டுபிடித்தார் என்றால், இடைக்கால இலக்கியப் பாதிப்பின் விளைவு என்ன? காரணம் என்ன? என்று கேள்வி எழும். இக்கேள்விக்கு விடை அந்நியப் பண்பாட்டின் படையெடுப்பு என்பது தெரிய வரும். அப்படியானால் அந்நியப் பண்பாடு புகுத்திய புதிய உறவு முறை என்ன? என்ற கேள்வி எழும். இடைக்கால இலக்கியத்திற்கு முழுதும் நேரம் ஒதுக்கி, ஆய்வு



படிப்பகம்

padippakam



நோக்கில் கண்டு அப்புதிய உறவு முறையை வார்த்தெடுத்து, அப்புதிய உறவினால் வந்த விளைவுகளைக் கண்காணிக்கிறோம். அறியாதோரையும் உண்மையான அழைப்பிற்குரிய உறவல்லாதோரையும் அண்ணன், அக்கா, தம்பி, தங்கச்சி என அழைக்கும் முறை தமிழகச் சிற்றூர்களில் இருந்தது. சகோதரத்துவத்தைப் பொழியும் இவ்வழைப்பு முறை இன்று அங்கிள் (UNCLE), ஆண்ட்டி (AUNTY) என்று மாறிவிட்டது; மாற்றப் பட்டது. மூத்தோரை அண்ணன், அக்கா என்று அழைப்பதற்கும், மாமா, அத்தை என்று அழைப்பதற்கும் இடையே உள்ள பண்பாட்டு இடைவெளி சிறியது அன்று. மிகப்பெரியது. நீண்டது. மாமன் உறவு வளர்ந்தோ வீழ்ந்தோ இறுகியோ குறுகியோ தவிக்கிறதென்றால், அச்சமுதாயத்தின் பொருளாதார நிலையும், வாழ்க்கை நிலையும் முழுவதுமே மாறியுள்ளன என்பது பொருள். இப்படி உறவுகளின் வளர்ச்சி வீழ்ச்சி நிலைகளை முழுமையாகப் புரிந்து கொண்டபின், என்ன செய்வது? 'பண்பாட்டு அழிவைத் தடுக்க உறவுமுறைகளைக் கட்டிக் காப்பது அவசியம்' என்ற எண்ணம் தெளிவாகத் தெரியும். இதை இன்றைய தமிழகத்திற்கு எடுத்துச் சொல்லலாம். அல்லது பண்பாட்டுப் படையெடுப்பு உறவு என்ற சிறு கூறின் வழியாக எப்படி ஒரு சமூகத்தையே அசைக்கிறது, மாற்றுகிறது என்பதை ஆய்வு நோக்கில் கண்டு வெளிப்படுத்தினால் 'சமூகவியல்' வளரும். சமூக உறவு ஒரு சமுதாயத்தை வளர்க்கின்ற அல்லது வீழ்த்துகின்ற அளவு சக்தி வாய்ந்தது என்பதை உலகுக்கு எடுத்தோதலாம். இது தவிரச் சமூக உறவு வளைந்து தரக்கூடியது. சமூக பொருளாதார நிலைகளுக்கேற்ப வளையக் கூடியது. (FLEXIBLE) என்று ஆய்வின் மூலம் உலகுக்குச் சொல்லலாம். இதுபோலவே, தமிழ் இலக்கியத்தில் காணப்படும் தமிழரின் குடும்பம், தமிழரின் திருமண முறைகள், தமிழரின் உறவுகள், தமிழரின் மதம், தமிழரின் கல்வி முறை, தமிழரின் சட்டங்கள், வாழ்க்கை நெறிகள், விதிகள், தமிழ் இலக்கியம் காட்டும் உற்பத்தி, பொருளாதார முறைகள், தமிழ் இலக்கியத்திலுள்ள



படிப்பகம்

padippakam



அரசியல் விதிகள், அமைப்புகள் எனப் பலவற்றையும் வரலாற்றுப் போக்கில் தொகுத்துச் சமூகவியல் நோக்கில் ஆய்வு செய்வது இலக்கியத்திற்கு நலம் பயக்கும். தமிழ்ச் சமுதாயத்தைப் புரிந்துகொள்ள மிகவும் கைகொடுக்கும்.

2. 'ஆய்வு' என்பது மனிதனுக்கு இயற்கை வழங்கிய கொடைகளின் உச்சக்கட்டம். ஆய்வு அதாவது பிரித்தறிதல் *(ANALYSIS)* என்பது பகுத்தறிவினுடைய மிகச் சிறந்த வெளிப்பாடாகவும் திகழ்கிறது. லெவிஸ்ட்ராஸ் என்ற மானுடவியல் நிபுணர் வகுத்தல் பண்பை, வளர்ந்த சமுதாயத்தின் அறிகுறியாகக் கருதினார். அவர் தாம் ஆய்வுக்குட்படுத்திய பழங்குடிகள் வாழ்க்கையைத் திறம்படப் பகுப்பாய்வு செய்து விளக்கினார். ஏறக்குறைய பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் லெவிஸ்ட்ராஸ் தோன்றினார். ஆனால் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று வகுத்து வாழ்ந்த தமிழர்களின் வளர்ச்சி எத்துணை உயர்ந்தது! சமுகவியல் ஆய்வினை இலக்கியத்தில் உட்படுத்துகிற முயற்சியே, தமிழ் இலக்கியச் சமூகவியலின் ஒரு முதன்மைக் குறிக்கோள். ஆய்வு செய்ய அறிவியல் போக்கு *(SCIENTIFIC ATTITUDE)* வேண்டும். சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நடுநிலையில் நின்று நன்மை தீமைகளைப் பிரித்தறிவது, நன்மைகளையும் கூடத் தரம் பிரிப்பது என்று கொள்ளலாம். ஆய்வாளனுக்குத் தவறுகளை ஏற்கக் கூடிய துணிச்சல் வேண்டும். நடுநிலையான பார்வையை எப்படிப் பெறுவது? என்ற வினா வரும். ஒரு கோணத்தில் மட்டுமின்றி, பல்வேறு கோணங்களில் நின்று ஒரு பொருளை ஆய்வு செய்தால் ஏறக்குறைய தெளிவான, நடுநிலையான எண்ணம் மலரும். அமைப்பியல் ஆய்வின் அடிப்படை இதுதான்.

சமுதாயம் என்றால் என்ன என்பது குறித்து எத்தனையோ அறிஞர்கள் மேல்நாட்டிலும், நம் நாட்டிலும் எண்ணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துகளையும் பாரதியின் கருத்துகளையும் ஆய்வு செய்வோம். கார்ல்



படிப்பகம்

padippakam



மார்க்ஸ் காட்டிய சமுதாயத்தையும் பாரதி காட்டிய சமுதாயத்தையும் ஒப்பிடுவோம். எண்ணற்ற சமூகவியல் அறிஞர்களின் கருத்துகளைப் புரிந்துகொள்ளப் பாரதியின் கருத்துகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்தால் பாரதியம் புகழ் பெறும். பாரதியின் முற்போக்கான எண்ணங்களும், பிற்போக்கான எண்ணங்களும் தெரிய வரும். ஆகவே நல்ல சமுதாயம் எது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இப்படிப்பட்ட ஆய்வு தமிழ் இலக்கியத்திற்கு உலகத் தரத்தையும் (INTERNATIONAL RECOGNI-TION) தமிழருக்கு உலகளாவிய ஆய்வுப் பார்வையையும் தரும்.

சமுதாயம் எது என்பதை டால்பாட் பார்சன் என்ற அறிஞர் பின் வருமாறு விளக்குவார்.

*"SOCIETY MAY BE DEFINED AS THE TOTAL COMPLEX OF HUMAN RELATIONSHIPS IN SO FAR AS THEY GROW OUT OF ACTION IN TERMS OF THE MEANS-END RELATION SHIP, INTRINSIC OR SYMBOLIC".*

டால்பாட் பார்சனின் எண்ணப்படி சமுதாயத்தின் கூறுகள் எவை?

1. மனித உறவுகளின் கூட்டு.
2. மறைமுகமான அல்லது வெளிப்புற அடையாளங்களில் வெளிப்படும் செயலில் திகழும் உறவுகளின் கூட்டு.
3. குறிக்கோள் உறவின் அடிப்படையில் ஏற்படும் செயல்களின் விளைவாக மறைமுகமாகவோ, வெளிஅடையாளங்களிலோ காணப்படும் சமூக உறவுகளின் கூட்டு.

இனி, இப்பொருளை நாம் பாரதி காட்டும் சமுதாயத்தில் புகுத்தி ஆய்வு செய்ய வேண்டும். பாரதி காட்டும் மனித உறவுகள், பாரதி காட்டும் உறவுகளின் வெளி அடையாளங்கள், பாரதி காட்டிய பல்வேறு மனித உறவுகளின் அடிப்படையில் இருக்கும் தொடர்புகள்.



படிப்பகம்

padippakam



விளைவுகள், பாரதி காட்டிய மனித உறவின் அடிப்படைகள், பாரதி காட்டும் வாழ்க்கைக் குறிக்கோள்கள் அவற்றை அடைவதற்கான வழிகள், இந்த வாழ்க்கைக் குறிக்கோளை அடைய உதவும் வழிகளில் குறுக்கிடும் உறவுகள், அவற்றின் பயன்கள், போக்குகள் எனப் பல்வேறு கூறுகளை நாம் உருவாக்குகிறோம். இக்கூறுகளைப் பாரதியில் இருந்து பிரித்தெடுத்து அவற்றிற்கிடையேயான உறவையும் தொடர்பையும் ஆய்வு செய்தால் பாரதி காட்டும் சமுதாயம் நமக்குப் புரியும்.

இப்படிப் பல்வேறு அறிஞர்களின் கோணத்தில் பாரதியை ஆய்வு செய்தால் பாரதி காட்டிய சமுதாயமும், அச்சமுதாயத்தை அமைப்பதற்கான வழிமுறைகளும் அங்கே தென்படும் என்பதில் ஐயமில்லை. இப்படி ஆய்வு செய்வதால் பாரதியின் தனித்தன்மை பாதிக்கப்படுமா? என்ற கேள்விக்கு விடை `இல்லை' என்பதுதான். இந்த ஆய்வு, பாரதி காட்டும் சமூகத்தை மேலும் துல்லியமாகப் புரிந்துகொள்ள மட்டுமே உதவும். டால்பாட் பார்சன் தந்தது `சமுதாயம்' என்பதற்கான உலகளாவிய விளக்கம். பாரதி காட்டிய சமுதாயத்தை நாம், சமூகவியல் அறிஞர் பார்சனின் கோணத்தில் இருந்து புரிந்துகொள்கிறோம் அவ்வளவுதான். ஆனால் பல்வேறு கோணங்களிலும் இருந்து ஆய்வு செய்தபின், பாரதியின் சமுதாயம் பற்றிய எண்ணத்தில் ஏதாவது பிற்போக்குத்தனம் தெரியுமென்றால் நாம் திறந்த மனத்தோடு ஏற்றே ஆக வேண்டும்.

3. தமிழ் இலக்கியத்தைப் பொழுதுபோக்குக் கருவியாகவே நாம் பயன்படுத்தி வந்துள்ளோம். இனியும் அப்படிப் பயன்படுத்தவே பலர் விழைகிறார்கள். திரைப்படம் பற்றிப் பின்வரும் கருத்து பலர் எண்ணத்தில் கூட இருக்கிறது. 'அவனவன் இருபது மணி நேரம் உழைச்சிட்டு, ரெஸ்டு எடுக்கத்தான் படத்துக்கு வர்றான். அங்கே போய், பாவம், அவன் நல்லவனா இரு என்று சொல்லி IRRITATE பண்ணலாமா?



படிப்பகம்

padippakam



# கலாச்சார முரண்பாட்டுக்குள் பெண்கள்

திருமதி. செல்வி ஞானராஜன்

கலாச்சாரம் ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் முக்கியமானது. நம் நாட்டு கலாச்சாரம், பழக்க வழக்கங்களுக்கும் மேல் நாட்டு கலாச்சார பழக்கவழக்கங்களுக்குமிடையில் நிறைய வேறுபாடுகள் உண்டு. கலாச்சாரம் என்பது ஒருவருடைய உடை, ஒழுக்கம், நடை (செயல்பாடு) பழக்கவழக்கங்களிலிருந்து வெளிப்படுகின்றது. கலாச்சாரம் சிறுவயதில் இருந்தே பின்னிப்பிணைந்து இருத்தல் வேண்டும்.

கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதில் பெண்கள் தான் முக்கிய பங்கு கொள்கிறார்கள். ஒரு பிள்ளை பால் குடிக்கும் வயதிலிருந்து உலகத்தை புரியும் வயது வரை தாம்தான் அப்பிள்ளைக்கு வழிகாட்டியாக இருக்கிறார். தாயானவள் தன் பிள்ளைக்கு உணவு ஊட்டி வளர்ப்பது போல கலாச்சாரத்தையும், பழக்க வழக்கங்களையும் அப்பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அந்தக் காலத்துப் பெண்கள் படிப்பு அறிவு குறைந்திருந்தும், ஒழுக்கம், பண்பு, மரியாதை என்னும் கலாச்சாரத்துடன் வாழ்ந்தார்கள். ஆனால் இன்றைய பெண்களில் சிலரோ மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கி தம் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையையும் சீரழித்து



படிப்பகம்

padippakam



வருகின்றார்கள். சமயப்பற்று உடைய ஒருவரால்தான் கலாச்சாரத்தைக் கடைப்பிடிக்க முடியும். தமிழ்க் கலாச்சாரம் என்பது தமிழும் சமயமும் சேர்ந்தது. சமயப்பற்று இருந்தால்தான் ஒருவனுக்கு தெய்வபக்தி இருக்கும்.

தெய்வபக்தி உடைய ஒருவரின் மனதில் பயம், அடக்கம், மரியாதை இயல்பாகவே உருவாகும். அப்படி இருக்கும் ஒருவரால்தான் பெரியோர்களை மதித்து நடக்கவும், நல்ல ஒழுக்க பண்பு உடையவர்களாகவும் வாழ முடியும். இதனைத்தான் வள்ளுவர் கூறுகிறார்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" என்று

பெண்கள் அன்பு, பண்பு, கருணை, பாசம் என்னும் அணிகலன்கள் உடையவர்களாக இருக்க வேண்டும். பெண்கள் அணியும் ஆபரணங்கள் அவர்களுக்கு அணிகலன்கள் அல்ல. குத்துவிளக்கில் உள்ள ஒளிரும் சுடர் எவ்வாறு ஒழுங்காகவும் - அடக்கமாவும் - அமைதியாகவும் எரிகிறதோ அவ்வாறு பெண்களும் பொறுமையுடனும், அன்புடனும் குடும்ப விளக்கை ஒளிர்விட்டு எரியச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் குடும்பத்தில் - நிம்மதியாகவும் - சந்தோசமாகவும் வாழ முடியும்.

இன்று நம் நாட்டில் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் பெண்கள் கலாச்சாரத்திற்கு முக்கியத்துவத் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தம் பிள்ளைகளின் படிப்பு, பழக்கவழக்கங்கங்களில் நல்ல ஊக்கம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதே போல மேல் நாடுகளில் வாழும் பெண்களும் இந்நாட்டு பழக்கவழக்கங்களை விட்டு நம் கலாச்சாரத்தைப் பின்பற்றி மேலே குறிப்பிட்டுள்ள ஒழுக்கம், பண்பு பொறுமையோடு வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அத்துடன் வருங்கால இளைய சமுதாயத்திற்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்க வேண்டும்.



படிப்பகம்

padippakam



# கூண்டைத்திற

கவிஞர் புதுவை இரத்தினதுரை

ஆண்டு பலவாக அடங்கி
குனிந்த தலை
மீண்டும் நிமிர்த்தாது இருக்கின்றாய்
அந்தோ பார்
காலடிகள் பட்டு கசங்குகின்ற புல்
நாங்கள்
நாலடிகள் எடுத்து நடப்பதற்குள்
முன்போல
மீண்டும் நிமிர்ந்து மிடுக்கோடு நிற்கிறது
யானையைக்கூட அடக்கினாள்
"அரியாத்தை"
யாரிவள்?
உன் பூட்டி
பூனைக் கண்ணோடு புகுந்த அந்நியனை
ஓட விரட்டினான் ஒருவன்
யாரிவன்?
உன் பூட்டன்
வேண்டும் உனக்கிந்த வீரம்
தமிழனே
கூண்டைத் திறந்து குதித்து வெளியே வா

நன்றி: நினைவழியா நாட்கள் "கவிதைத் தொகுப்பிலிருந்து"



படிப்பகம்

padippakam



# ஆன்மீக விடுதலைப் பணியாளர்

**மௌன அவதானி**

ஒபகௌசன் நகரில் ஆன்மீகச் செயல்பாட்டுத் தளமாக இயங்கி வரும் சைவசமய வழிபாட்டு நிலையம் கடந்த 14.4.97ல் புதுவருடப் பூசையை சிறப்பாக அமைத்துக் கொண்டது.

பூசை, பசனை, கூட்டுப் பிரார்த்தனை என்ற ஆன்மீகச் செயல்பாட்டுடன் இம்முறை ஒரு புதிய நிகழ்ச்சியாக கௌரவிப்பு நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

ஒவ்வொருவருடமும் சைவசமய வழிபாட்டு நிலையம் புதுவருடப் பூசைத் தினத்தன்று எமது தாயகமான தமிழீழத்தில் இயங்கி வரும் செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக நிதி அன்பளிப்புச் செய்வது போல் இப்பூசை தினத்தன்றும், வழிபாட்டு நிலையத்திற்கு பூசை தினங்களில் வருகை தந்த போதும், அன்றைய தினம் வருகை தந்த போதும் அன்பர்களால் மனமுவந்தளிக்கப்பட்ட நிதியினை, யேர்மனியில் செஞ்சோலைக்கானச் செயல்பாட்டினைச் செய்து வரும் தமிழ் மாணவர் அமைப்பின் நிர்வாகச் செயல்பாட்டாளர்களில் ஒருவரான திரு. இ. வண்ணன் செஞ்சோலை சார்பாகப் பெற்றுக் கொண்டார். சேகரிக்கப்பட்ட நிதியினை நிலைய குருவான ஸ்ரீபஞ்சாட்சர வித்தியானந்தக் குருக்கள் இரு சிறுமிகளின் கைகளில் ஒப்படைக்க அவ்விரு சிறுமிகளும் திரு. இ. வண்ணனிடம் ஒப்படைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து கௌரவ விருது வழங்கல் இடம்பெற்றது. புலம்பெயர் நாட்டில் மூத்த மத குரவாக மட்டுமல்லாது, சமுதாயச் செயல்பாடுகளில் மதத்தினையும் பங்குபெறச் செய்ய தன்னாலியன்ற ஆன்மீகச் செயல்பாட்டினைச் செய்து வருவது மட்டுமல்லாது, வயது, அனுபவம் போன்றவற்றில் மட்டுமல்லாது



படிப்பகம்

padippakam





தமிழீழ விடுதலைப் போர் வெற்றி பெறவும், தமிழீழத் தேசியத் தலைவரினதும், எமது தேசியப்படையான தமிழீழ விடுதலைப் புலிகளினதும் ஆன்மீக பலம் அதிகரிக்க வேண்டி புலம்பெயர் நாடுகளில் ஆன்மீ நிலையங்களாக ஆங்காங்கே இயங்கி வரும் ஆலயங்கள் ,சைவமய வழிபாட்டு நிலையம் போன்றவற்றில் யாகங்கள், பிரார்த்தனைகள் போன்ற வற்றைச் செய்து வருகின்ற ஸ்ரீபஞ்சாட்சர வித்தியானந்தக் குருக்கள் அவர்களுக்கு இளபற்றைக் கண்ணுற்றும், ஆன்மீகச் செயல்பாட்டினைக் கண்ணுற் றும் ஓபகௌசன் வாழ் தமிழ் மக்கள் சார்பாக, சைவசமய வழிபாட்டு நிலையம் "ஆன்மீக விடுதலைப் பணியாளர்" என்ற கௌரவ விருதினை அளித்துக் கௌரவித்தது. இக்கௌரவிப்பில் நிலைய குரு அவர்களின் துணைவியாரும் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

இக்கௌரவிப்பு நிகழ்வில் திருமதி. வித்தியானந்தக் குருக்கள் அவர்களுக்கு திருமதி. தாமரை மனோகரன் மாலை அணிவித்து மரியாதை செய்ய, சைவமய வழிபாட்டு நிலையத்தின் முன்னாள் பொறுப்பாளர்களில் ஒருவரான திரு. வ. தில்லைநாதன் நிலைய குரு அவர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்ய நிலையத்தின் பொறுப்பாளர் திரு. ச. லோகேஸ்வரநாதன் நிலைய குருவிற்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க, நிலைய செயல்பாட்டாளர்களில் ஒருவரான திரு. ம. கருணாநிதி நிலைய குருவிற்கு, அவரின் செயல்பாட்டினைக் குறித்து நின்ற வெளிப் பாடான "ஆன்மீக விடுதலைப் பணியாளர்" என்ற சொற்பதங்களைக் கொண்ட கௌரவ விருதினை சபையோர் முன் வாசித்தளித்து கௌரவித்தார்.

அன்றைய பூசையினையும் அதனைத் தொடர்ந்த அனைத்து நிகழ்வினையும் நிலைய செயல்பாட்டாளர்களில் ஒருவரான திரு. கா. க முருகதாசன் ஒழுங்குபடுத்தியிருந்தார். அன்றைய தினம் மேற்படி நிலையம், ஓம் என்ற பிரணவ எழுத்து நடுவில் இடம்புற நாற்றிசையும் பரந்து செல்லும் வடிவினைக் கொண்ட சின்னத்தை சைவசமய வழிபாட்டுக்கான சின்னமாக அறிமுகப்படுத்தியது.

சைவசமய வழிபாட்டுநிலையத்தின் அன்றைய நிகழ்வுகள் யாவும் சிறப்பாக இடம்பெற்று நிறைவு பெற்றன.



படிப்பகம்

padippakam



ன்னத சக்தி
லோ

# நகைச்சுவை

ரஷ்யக்கவிதை:யெவ்கனி யெவ்டுஷெங்கோ
தமிழில்:தி.இளங்கோவன்

அரசர்கள்,
சக்கரவர்த்திகள், ஜார்கள்
உலகத்தின் முடிமன்னர்கள் அனைவரும்
அதிகாரம் செலுத்தியிருக்கின்றனர்
எண்ணற்ற அணிவகுப்புகளை,
ஆனால் அவர்களால் அதிகாரம் செலுத்த
முடியவில்லை நகைச்சுவை மீது

ஈசாப், அந்த நாடோடி வருகை புரிந்தான்
நாள் முழுதும்
ஆடம்பரங்களில் மூழ்கியிருந்த
அந்த புகழ் பெற்ற மனிதர்களின்
அரண்மனைகளுக்கு,
பிச்சைக்காரர்களுக்கும்
மேலானவர்களாக
அவர்களை அவன் கருதவில்லை

எந்த வீடுகளில்,
வேடதாரிகள் தங்கள்
காலடித் தடங்களை
விட்டுச் சென்றார்களோ,
அங்கே
கோட்ஜா நஜ்ருத்தின்,
தன் நகைச்சுவையால்
தலை கீழாக்கினான்
கீழான மனங்களை
சதுரங்க காய்களைப் போல



படிப்பகம்

padippakam



அவர்கள் முயன்றார்கள்
நகைச்சுவையை வேலைக்கு அமர்த்த

ஆனால் நகைச்சுவையை
விலைக்கு வாங்க முடியாது
அவர்கள் முயன்றார்கள்
நகைச்சுவையைக் கொலை செய்ய
ஆனால் நகைச்சுவை
மூக்கின் மீது விரலை ஆட்டி
அவர்களை எள்ளி நகையாடிச் சென்றது

அது கடினமானது
நகைச்சுவையுடன் போரிடுவது
அவர்கள் இடையிடையே அவனைக்
கொலை செய்தனர்
அவனது துண்டிக்கப்பட்ட தலை
ஆடியது ஒரு குத்தீட்டியின் முனையில்
ஆனால் ஊமை நடிகர்கள் குழலூதிய படி
தங்கள் கோமாளிக் கதையைத்
தொடங்கிய போது
நகைச்சுவை அகம்பாவத்துடன்
" நான் திரும்பிவிட்டேன் '
" நான் இங்கிருக்கிறேன் '
எனக் கத்தியது
நடனமாடத் தொடங்கியது
ஒரு பழைய கந்தலான மேல் கோட்டுடன்
கீழ் நோக்கிய முகத்துடன்
வருத்தம் தோய்ந்த முகமூடியுடன்
ஒரு அரசியல் கைதியாக,
அவன் இப்பொழுது
கைது செய்யப்பட்டு,
தனது மரணத்தை நோக்கி
நடந்து கொண்டிருந்தான்

அவன் எல்லாவற்றிலிருந்தும் நீங்கி
வாழ்க்கையின் அப்பால் உள்ளவற்றை



படிப்பகம்

padippakam



ஏற்பது போல தோற்றம் காட்டினான்
ஆனால் திடீரென்று
அவன் நழுவி வந்தான்
தன் மேல் கோட்டிலிருந்து
தனது கரங்களை அசைத்து
ஒரு அதிர்வை உண்டாக்கினான்

நகைச்சுவை
தள்ளப்பட்டது
சிறைகளில்
நகைச்சுவை நேராக நுழைந்து சென்றது
சிறைக் கம்பிகளிடையேயும்
கற்சுவர்களின் ஊடேயும்
இருமிய படி
சிப்பாய்களில் ஒருவனைப் போல
கையில் துப்பாக்கியை ஏந்தி
ஒரு பாடலைப் பாடியவாறே
அணிவகுத்துச் சென்றது
மாரிகால அரண்மனையின் மீது
அவன் முகச்சுழிப்புகளுக்கு
பழக்கப்பட்டவன்
ஆனால் அவை அவனுக்கு
துன்பம் தருவதில்லை
சில நேரங்களில்
நகைச்சுவை
தன்னையே நகைச்சுவையுடன்
பார்த்துக் கொள்வதுண்டு
அவன் அழிவற்றவன்
விரைவு, சுறுசுறுப்பு கொண்டவன்

அவன் கடந்து செல்வான்
எதன் வழியாகவும்
எவரின் ஊடாகவும்
எனவே
நகைச்சுவைக்கு வெற்றி உண்டாகட்டும்
அவன் ஒரு வீரமான மனிதன்



படிப்பகம்

padippakam



அன்னை பூபதி நினைவு இதழ்
தமிழீழத் தாய் எனும் பொருக்கு உரித்தாகி
அகிம்சைத் தீயில் உரிமைக்குக் குரல் கொடுத்த
அன்னை பூபதி

உலகை
வெ

# இலக்கியமும் உளவியலும்

சி.இ.மறைமலை

"மனமான வானரக் கைம்மாலை ஆகாமல்
எனையாள் அடிகள் அடி எய்துநாள் எந் நாளோ."

என்பர் தாயுமானவர். "மனம் என்கிற குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை போலாகாமல் என்னை ஆள்கின்ற இறைவனுடைய திருவடியை அடையும் நாள் எந்நாளோ" என இப்பாடலின் மூலம் இறைவனை இறைஞ்சுகிறார் தாயுமானவர். (தத்துவமுறைமை 5) தாயுமானவருக்கு முன்னும் பின்னும் இறைவனைப் போற்றிய அடியார் அனைவருமே தமது மனத்தைப் பழித்தும் இழித்தும் கூறி இறையருளே வேண்டிநிற்றலை இறைநெறி இலக்கியங்கள் செவ்விதின் உணர்த்துகின்றன. இந்நூற்றாண்டுக் கவிதையின் விடிவெள்ளியாகிய பாரதியார் "பேயாய் உழலும் சிறுமனமே" என மனத்தைப் பழித்தலைக் காண்கிறோம். அந்தக் கரணங்கள் நான்கில் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்) மனத்தையும் ஒன்றாகவைத்து மனம் போன போக்கில் உழல்வது செந்நெறியன்று என முன்னோர் மொழிந்து சென்றனர்.

இந்த "மனம்" என்பது என்ன? அதன் செயல்முறைகள் யாவை? என்பது பற்றிய வினாக்களுக்குத் தெளிவான விடைகளை நம் இலக்கியங்களில் காண இயலாது. மனத்தின் செயல் முறைகளைப்பற்றிய அறிவியலாகத் தோன்றி, வளர்ந்து, பல்வேறு பிரிவுகளாகக் கிளைத்திருப்பதே இன்றைய உளவியல் ஆகும்.



படிப்பகம்

padippakam



"தற்போதைய உளவியல் மனிதனின் நடத்தையை அறியும் ஒரு விஞ்ஞானவியலாகும். குறித்த மனிதனின் நடத்தையானது, குறித்த சூழ்நிலைத் தூண்டல்களினால் ஏற்படுவதன் காரணமாகச் சூழ்நிலை மனிதனின் நடத்தையை அறியவும் விவரிக்கவும் முக்கியமாக அமைகிறது" என்பர் உளவியல் அறிஞர் தா.ஏ. சண்முகம்.

உளவியலில் பல்வேறு கருத்துக் குழுக்கள் விளங்குகின்றன. அவை வெவ்வேறு அமைப்புகளாக இயங்குகின்றன. அவற்றுள் நடத்தையியல் (Behaviovrism), ஹார்மீகக் கோட்பாடு (Harmism), கெஸ்டால்ட் உளவியல் (Gestalt), உளவியற் பகுப்பாய்வு (Psychoanalysis) ஆகியவை முதன்மையானவையாகும்.

நடத்தையியலுக்கு முன்னதாக திஷ்னர் என்பவரால் உளவியல், தன்னை நோக்கி அறிதல் (Introspection) என்னும் முறையின் மூலமே இயங்கி வந்தது. உளவியல்- அனுபவத்தை ஆய்வதால், அனுபவத்தை ஆய்ந்தறிதற்கு அவ்வனுபவத்திற்கு ஆட்படும் மனிதனே தக்கவன் ஆவான் எனக் கூறி உளநோயால் துன்புறுபவர்கள் தன்னை நோக்கி அறிதல் (Introspection) மூலமாகத் தரவுகளைத் திரட்ட வேண்டும் எனக் கூறப்பவட்டு ந்தது.

விலங்குகள், குழந்தைகள், அறிவுக் குறைபாடுடையவர்கள், உளநோயாளிகள் முதலியோர் தன் - ஆய்வு செய்து தங்கள் அனுபவங்களை எடுத்துரைக்க இயலாது. எனவே அனுபவங்களை ஆராயத் தன்னாய்வு முறையைப் பயன்படுத்துவது எவ்வகைப் பயனையும் விளைவிக்காது என அமெரிக்க நாட்டு அறிஞர் ஜான்வாட்சன் கூறினார். வாட்சனின் சொற்களில் கூறினால் "நடத்தையியல் கோட்பாட்டின்படி, உளவியல் என்பது இயற்கை அறிவியலில் புறநோக்கு நிலையிலான தொருபிரிவு (Objective branch) ஆகும். கருத்தளவிலான அதன் குறிக்கோள் யாதெனில் நடத்தையை எடுத்துக் கூறுவதும் அதனைக் கட்டுப்படுத்துவதும் ஆகும். தன்னாய்வுமுறை வடிவங்கள்



படிப்பகம்

padippakam



உளவியலை அறிதற்குரிய அணுகுமுறைகள் ஆகா" (John. B. Weston quoted in Abnormal psychology P. 41)எனலாம்.

விலங்கின நடத்தைக்கான விதிகளை அறிந்தால் சிறிது சிக்கலான குழந்தையின் நடத்தையையும், மிகவும் சிக்கலான முதிர்ச்சிப் பருவமுடைய மனிதனது நடத்தையையும் ஒருவாறு அறியலாம் என்பது நடத்தையியலாளர் தம் கருத்தாகும்.

வாட்சனது சமகாலத்தவராகிய உருசிய நட்டு உளவியல்றிஞர் பாவ்லவ் (I. P. Pavlov) ஒரு புதிய கற்றல் விதியைக் கண்டுபிடித்தார். ஆக்கநிலையிருத்தம்(Conditioning) என்னும் இக்கற்றல் விதி உளவியல் துறையில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு பொருளும் இயற்கையாகவே ஓர் ஒழுங்கமைவில் (Configuration) அமைந்துள்ளது என்பதே கெஸ்டால்ட் உளவியலின் அடிப்படையாகும். நடத்தைை அறிய, அதனைத் தூண்டல்-துலங்கல் (Stimulus-Response) எனப் பிரிவுகளாகப் பாகுபடுத்தி அறிய முற்படும் நடத்தையியலிலிருந்து கெஸ்டால்ட் உளவியல் முற்றிலும் மாறுபடுகிறது. இங்ஙனம், பாகுபடுத்திக் காணாமல் அதனை 'முழுமையாகவே' பரிசோதனை செய்து உண்மையை அறிய வேண்டும் எனக் கெஸ்டால்ட் உளவியல் வலியுறுத்துகிறது.

சிக்மண்டு பிராய்டு தோற்றுவித்த உளவியற் பகுப்பாய்வு அடுத்த இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பிராய்டு 'லிபிடோ' எனப் பெயரிட்ட மன ஆற்றலுக்கு வில்லியம் மக்டூவல் என்பவர் 'ஹார்ம்' (Herme) எனப் பெயரிட்டார். இந்த ஆற்றல், தனிப்பட்ட இயக்கங்கள் கொண்ட இயல்பூக்கங்கள் (Instincts) வழியாக நிறைவு பெறுகிறது என மக்டூவல் குறிப்பிட்டார். இதன் விளைவாக இக்கொள்கை ஹார்மீகக் கொள்கை (Harmism) என அழைக்கப்படுகின்றது.



படிப்பகம்

padippakam



இத்தகைய பல்வேறு பிரிவுகளைப் பெற்ற உளவியல் ஓர் அறிவியல் ஆகும். அது மனிதனின் நடத்தையைக் கூர்ந்து நோக்கி, பரிசோதனை போன்ற அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி மனிதனின் நடத்தைக்கான அடிப்படை விதிகளை எடுத்துரைக்கிறது. ஆயின் இலக்கியம் ஒருகலை; கலைகளுக்கெல்லாம் மணிமுடியாக விளங்கும் கலை; கவின் கலையாகவும் பயன்கலையாகவும் திகழும் தனித்தன்மை வாய்ந்த கலை; மனிதனின் சிந்தனை முதிர்ச்சியின் வெளிப்பாடாகவும் சிந்தனையைச் சீர்மைப் படுத்தும் வழிகாட்டியாகவும் விளங்கும் கலை.

உளவியல் என்னும் அறிவியலும், இலக்கியம் என்னும் ஒப்பற்ற கலையும் எவ்வகையில் ஒன்றுபட இயலும்! "இரண்டுமே மனிதனுடைய அகநிலையைச் சார்ந்தவை: அவனுடைய செயல் நோக்கங்கள், நடத்தை மற்றும் குறியீடுகளை உண்டாக்கி உபயோகிக்கும் அவனுடைய திறனைப் பற்றியே பேசுகின்றன, "என்கிறார் ஒப்பிலக்கிய அறிஞர் வை. சச்சிதானந்தன். (ஒப்பிலக்கியம். ப. 199) மனித உள்ளத்தைப் பற்றிய ஆய்வில் இலக்கியமும் உளவியலும் வெவ்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றனவெனினும் அவற்றின் கருவாக அமைந்திருப்பது மனித உள்ளமே ஆகும். உளவியலாளர் மனித உள்ளத்தையும் மனிதனது நடத்தையையும் பகுத்தாய்ந்துவிளக்கிக் கூறுவதைத் தமது கடமையெனக் கொள்கிறார். இலக்கியப் படைப்பாளியோ இத்தகைய பகுப்பாய்வை முதன்மையாகக் கொள்ளாமல், மனிதனை மனிதனுக்கு உணர்த்த வேண்டும் என்னும் நோக்குடன் வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் மனிதனுடைய நடத்தை பெறும் மாறுபாடுகளை, மாற்றங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

எனவே இலக்கியமும் உளவியலைப் போலவே மனித மனத்தின் பன்முகச் செயற்பாட்டை, பல்வேறு நிலைகளை ஆய்வதில் கருத்துச் செலுத்துகிறது. அறிவியற் பாங்கான உளவியல் தோற்ற முறுதற்கு முன்னரே, பன்னெடுங்காலமாகவே, இலக்கியம் இப்பணியைச் செய்து வருகிறது.



படிப்பகம்

padippakam



தொல்காப்பியர், தமது பொருளதிகாரத்தில், 'மெய்ப் பாட்டியல்' என ஓர் இயல் வகுத்திருப்பது, இலக்கியத் தைப் படைத்தற்கு உளவியற் பின்புலம் ஓர் இன்றியமை யாத் தேவை என நம் முன்னோர் உணர்ந்திருந்தனர் என்பதைப் புலப்படுத்தும் தக்க சான்றாக விளங்குகிறது' எண்வகை மெய்ப்பாடுகளையும், அவற்றிற்கான நிலைக் களன்களையும் தொல்காப்பியர் விளக்கியிருப்பதைக் காணுவோர், தொல்காப்பியருக்கு நெடுங்காலம் முன்னரே இத்தகையதோர் உளவியல் அணுகுமுறை இங்கு வேரூன்றி யிருப்பதைத் தெளிவுற உணரலாம்.

அகனைந்திணைக்குரிய மெய்ப்பாடுகளையும் பெருந் திணைக்குரிய மெய்ப்பாடுகளையும் மிகவிரிவாகத் தொல் காப்பியர் விளக்கியிருப்பதனைக் கொண்டு அவரது காலத் தில் முறைமைப்படுத்தப்பட்டதோர் உளவியல் ஆய்வு இலக்கிய உலகில் நிலவி வந்ததனை அறுதியிட்டு உரைக்க முடியும்.

பழங்காலத்தில் மனநலமற்றோரைப் பிசாசினால் ஆட் படுத்தப் பட்டவராகக் கருதிவந்தனர் எனவும் பிறழ்நிலை நடத்தைக்கு (Abnormal behaviour)பிசாசே காரணம் எனக் கருதி, மனநலன் சிதைந்தோர் நலமடையும பொருட்டு, மனநோயாளிகளின் மண்டை யோட்டைச் செதுக்கி விட்ட னர் எனவும் தக்கசான்றாதாரங்களுடன் அறிஞர் எடுத் துக் காட்டியுள்ளனர். (Gerald. C. Davisou & John. M. Neali Abnormal Psychology)

இக்கால மருத்துவ இயலின் தந்தை எனப் போற்றப்படும் கிரேக்க அறிஞர் ஹிப்பொகிரேட்டஸ் (Hippocrates) தோன்றியதன் பின்னரே (கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு) இக்கொடிய வழக்கத்திற்கு எதிரான சிந்தனை எழுச்சி பெற்றது. ஹிப்போகிரேட்டஸ் ஏனைய நோய்களைக் குணப்படுத்துவது போலவே மனநோயைக் குணப்படுத்த லாம் எனவும் நமது அறிவுத்துறை இயக்கத்தின் செயற் களமாக மூளை விளங்குகிறது எனவும் தெளிவுறுத்தினார்.



படிப்பகம்

padippakam



இந்நிலையில், மனத்தின் நுண்மையான செயற்பாடு களைக் கூர்ந்து நோக்கி, 'மெய்ப்பாட்டியல்' வகுத்த தொல்காப்பியர் திறம் பழந்தமிழரின் அறிவுநுட்பத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குவதனை மறுக்கவியலாது. களவு, கற்பு ஒழுக்க நிலைக் காலங்களில் தலைவன், தலைவியரின் மனநிலை அடையும் பல்வேறு மாறுபாடு களையும் சங்கச் சான்றோர் செவ்விதின் புலப்படுத்தி யுள்ளனர். பல்வேறு கருத்துக் குழுக்கள் தோன்றிப் பல் வேறு கோட்பாடுகளை முன்வைத்து அவை தொடர்பான ஆய்வு தழைத்து அறிவியற் பாங்கான உளவியல் தோன்றி யுள்ள வரலாற்றை உணர்ந்தோர், மிகப்பழங்காலத்தி லேயே தமிழகத்தில் முறைமை சார்ந்த உளவியல் அணுகு முறை நிலவியுள்ளதைச் சங்கச் செய்யுட்கள் புலப்படுத்து வதனைக் காணும்போது வியந்துபோற்றுவர்.

''தமிழ்க்காதல்'' குறித்து விரிவான ஆய்வு நிகழ்த்திய அறிஞர். வ. சுப. மாணிக்கனார் தமது நூலின் முன்னுரை யில் ''அகத்திணைக்குப் பாடுபொருள் காதலாதலின், காதல் உள்ளத்தோடு இயைந்ததாகலின், இந்நூலா ராய்ச்சி பெரும்பான்மை உளவியல் பிடித்துச் செல்வதாகும் என்று குறிக்கொள்க'' என்று மொழிந்தது இவண் குறிப் பிடத்தக்கது. இந்நூலில் ''அகத்திணைத் தோற்றம்'' என்னும் இயலில் ''உளவியல் அடிப்படை'' என்னும் உட் பிரிவில் ''ஈண்டு உளவியல் என்பது என்ன? அகவிலக்கி யத்தைப் படைத்தது தமிழினம். அதனைப் படைப்பதற்கு அந்நல்லினம் பெற்றிருந்த தனிமனக்கூறு எது, அது நாம் காணுதற்கு உரியது''. என்று கூறும் வ.சுப. மாணிக்கனார் ப. 203)

''அகத்திணைச் செய்யுட்களில் பரந்து செறிந்து கிடக்கும் இயற்கைப் புனைவுகளையும் அப்புனைவு களுள் மறைந்தோடிக் கிடக்கும் ஒருபெரும் தன்மை யினையும் ஆராய முனைந்தால், பண்டைத் தமிழினத் தின் தனிமனக் கூறு தெளிவாகத் தோன்றும்'' என் கிறார். (ப. 204)



படிப்பகம்

padippakam





மேலும், செலவிடையழுங்கலைப் பற்றி வினக்கும் பொழுதும் - நம் முன்னோர் உளவியலறிவைப் பாராட்டு கிறார்.

"புறம் போய்ப் பொருள் தேடினும், அடைய வேண்டும் இடம் வீடுதானே. வீட்டவள் மனக்கவலையை மாற்றாமல் புறப்படுதல் அறிவுடைமையாகாது. ஆதலின் தலைவன் மேலும் சிலநாள் இல்லில் தங்கி அன்பு தோன்ற அளவளாவிப் பிரிவது கடமை. இச் செலவுத் தாழ்ச்சி-செலவழுங்கல்-தலைவிக்கு வெள்ளம் தணிவது போன்ற ஆறுதலை அளிக்கும். இரவு பகல் போலப் புணர்வு பிரிவுகள் இயல்பு என்பதை உணர்ந்து தெளிவாள்.

செலவிடை யழுங்கல் செல்லாமையன்றே
வன்முறை குறித்த தவிர்ச்சியாகும்

(தொல். ககரு0)

என்ற நூற்பா நம் முன்னையோர்
உளவியலறிவுக்குச் சான்று"

(தமிழ்க் காதல் ப. 101)

தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், முறைமை சார்ந்ததோர் உளவியல் நெறியைப் பின்பற்றியுள்ளமை அவற்றைக் கற்கும் போது புலனாகின்றனவெனினும் அவற்றை விரிவாக ஆய்ந்து வெளிப்படுத்தினாலே அக் கால உளவியல் நெறியை நாம் அறிந்து கொள்ளத் துணை புரியும். இவ்வகையில் 'சங்க இலக்கியத்தில் உளவியல்' என்னும் பி. எச். டி. பட்ட ஆய்வேடு குறிப்பிடத்தக்க சிறப்பை உடையது.

## கல்வியும் சூழலும்

**கற்றல்; கற்பித்தல் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் கற்பித்தலுக்கான சூழல் ஆரோக்கியம் நிறைந்ததாகக் காணப்பட வேண்டும்**




படிப்பகம்

padippakam

## சமர்ப்பணம்

தமிழ் இனத்திற்காகவும்; தமிழ்மொழியின் வளர்ச் சிக்காகவும் தங்களையே அர்ப்பணித்த தலைசான்றோர்க்கும் எம்மண்ணின் விடுதலைக்காக தங்களையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தியாக தீபங்களாகிய எங்கள் அன்பிற்குரிய மாவீரர்களுக்கும்; எம்மக்களுக்கும் இவ்விதழை இதய அஞ்சலியுடன் சமர்ப்பிக்கின்றோம்.



ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு.ஆக்கங்களைத் திருத்தவோ,மறுபரிசீலனை செய்யவோ,நிராகரிக்கவோ ஆசிரியருக்கு உரிமையுண்டு.

ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்பார்க் கின்றோம்.

ஆக்கங்களை அனுப்புவதற்கும் இவ்விதழ் சம்பந்தமான தொடர்புகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

K.K.Murugathaasan
Bromberger Str.8
46145 Oberhausen
Tele:0208 607635



இது ஒரு இலவச வெளியீடு

இவ்விதழை மற்றவர்களுக்கும் கொடுத்து உதவுங்கள்



இவ்விதழ் நூலுருப்பெற உதவி புரிகின்ற கரிதாஸ் அமைப்புக்கும் டியகோனி அமைப்புக்கும் நன்றிகள்

Für die freundliche Unterstützung bei der Herstellung dieses Heftes danken wir dem Caritasverband und dem Diakonisches Werk

வெளியீடு
ஓபகௌசன் தமிழர் ஒன்றியம்

படிப்பகம்

padippakam

# äleija

111,112,113

## ‘பெண்’ ஆய்வுகளும் அதன் தேவைகளும்

ஒரு சமூகத்தின் நிலையை ஆராய்வதற்கு சிறந்த வழிகளில் ஒன்று அந்த சமூகத்தில் பெண்ணின் நிலையை ஆராய்வதாகும் என்பதற்கமைய எமது வரலாற்றில் பெண்ணின் நிலை பற்றிய வெவ்வேறு பரிமாணங்கள் பற்றிய ஆய்வும் முக்கியமானதாகும்.வரலாற்றினடிப்படையில் அரசியல் சார்ந்த,சமூகம் சார்ந்த உண்மையான ஆய்வு எவ்வளவு அவசியமானதோ அதே போன்றுதான் பெண் சார்ந்த ஆய்வுகளும் முக்கியமானதாகும்.

ச. கலாநிதி

நன்றி:எரிமலை

VISdP.

ஓபகௌசன் தமிழர் ஒன்றியம்

VEREIN DER TAMILEN IN OBERHAUSEN

படிப்பகம்